2013 மார்ச் 25]

இதற்காக 18.802 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு தற்போது சாலை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. முதற்கட்டப் பகுதி 2002–க்கான புறவழிச் சாலைப் பணி, கி.மீ.8/8 முதல் 13/675 வரை அமைப்பதற்கு சேலம்–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் கி.மீ.230/4–ல் ஆரம்பித்து, குறுக்காபுரம், கல்யாணி 85, ஆர். குமராபாளையம், ஆயப்பாளையம், பிள்ளாநல்லூர் மற்றும் பொன்குறிச்சி கிராமங்கள் வழியாக மல்லியக்கரை, இராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு மாநிலச்சாலை எண் 79–ல் கி.மீ.51/2–ல் சென்றடையும் வகையில், மொத்தம் 13.234 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

54—

நியாய விலைக் கடை

***10988—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, கத்தேரி கிராமம், வளையக்காரனூரிலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, கத்தேரி கிராமம், வளையக்காரனூர் பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி என்னுடைய துணை வினாவை எழுப்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கத்தேரி ஊராட்சி, வட்டமலைப் பகுதி மக்கள் 2 கி.மீ. தூரம் நடந்து சென்று சாமியம்பாளையம் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க வேண்டியுள்ளதால், வட்டமலைப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சாமியம்பாளையம் தொடக்கக் கூட்டுறவுச் சங்கத்தால் கத்தேரி கிராமத்தில் நடத்தப்பட்டு வரும் வளையக்காரனூர் பகுதிநேர நியாய விலைக் கடையில் தற்பொழுது 513 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்தப் பகுதிநேரக் கடை, வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே இயங்கி வந்தது. இந்த அங்காடி தினமும் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினால், குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் பயனடைவார்கள் என்ற கோரிக்கை வரப்பெற்றதால், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ விலையில்லாத அரிசி வழங்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நுகர்வோரின் நலன் காக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இந்த அங்காடியை முழுநேர அங்காடியாகச் செயல்பட 15–3–2013–ல் உத்தரவிட்டுள்ளது. இதன்படி, வளையக்காரனூர் பகுதிநேர நியாய விலைக் கடை அங்காடி, வரும் 1–4–2013 முதல் முழுநேர அங்காடியாகச் செயல்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 *மார்ச்* 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், என்னுடைய தொகுதியில், சங்ககிரி பேரூராட்சி, வார்டு எண் 6 மற்றும் வார்டு எண் 10–ல் உள்ள இரண்டு நியாய விலைக் கடைகளிலும் 1,600–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் செய்யும்போது, அடிக்கடி பல பிரச்சினைகள் வருவதால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மேற்கண்ட இரண்டு நியாய விலைக் கடைகளையும் இரண்டாகப் பிரித்து, அத்தியாவசியப் பொருட்கள் சிரமமின்றிக் கிடைக்க ஆவன செய்வாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

அணை கட்டுதல்

***2717—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, சிங்கிரிப்பள்ளி கிராமம், நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?